ராணிப்பேட்டையில் வாகன உற்பத்தி தொழிலில் டாடா மோட்டார்ஸ் ரூ.9 ஆயிரம் கோடி முதலீடு: ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து

5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

சென்னை, மார்ச்.14–

தமிழகத்தில் வாகன உற்பத்தி தொழிலில் டாடா மோட்டார்ஸ் குழுமம் ரூ.9 ஆயிரம் கோடியை முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்தியாவிலேயே 2வது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டை 2030ம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இலக்கை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

மேலும், அதிக அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளக்கூடிய உயர் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களையும், பெருமளவிலான வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழில்களையும் ஈர்த்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, சென்னையில் ஜனவரி 7 மற்றும் 8ந் தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகவும் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு, முன்னெப்போதும் இல்லாத அளவாக, ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி முதலீடு மற்றும் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5 ஆண்டுகளில்...

இந்த நிலையில் முதலமைச்சர் முன்னிலையில் நேற்று டாடா மோட்டார்ஸ் குழுமம், வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. வாகன உற்பத்தித் திட்டத்தில், டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 5 ஆண்டுகளில் ரூ.9 ஆயிரம் கோடியை முதலீடு செய்யும். 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ராணிப்பேட்டை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பதற்காக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் முதலீடு ஊக்குவிப்பு முகமையான வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் விஷ்ணு மற்றும் டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் பாலாஜி ஆகியோரிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, செயலாளர் அருண் ராய், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் செந்தில்ராஜ் மற்றும் டாடா குழுமத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறியதாவது:–

இந்தியா விலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்வதற்கு முதலமைச்சரின் நல்லாட்சியே காரணமாக உள்ளது. தமிழகத்தில் இருக்கும் சாதகமான சூழல், கட்டமைப்பு வசதிகள், தொழிற்சாலைகள் அமைக்க ஏதுவான இடங்கள், மகளிருக்கான பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்களை கருத்தில் கொண்டுதான் வெளிநாடுகளில் இருந்து வரும் பல புதிய தொழில்துறை நிறுவனங்கள் இங்கு தொழிற்சாலைகளை தொடங்குகின்றன.

அதன் தொடர்ச்சியாக தற்போது டாடா நிறுவனம், தமிழகத்தில் ரூ.9 ஆயிரம் கோடியில் வாகன உற்பத்திக்காக முதலீடு செய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

72 தொகுதிகளுக்கான பாரதீய ஜனதா கட்சியின் 2ம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு

புதுடெல்லி, மார்ச்.14

72 தொகுதிகளுக்கான பாரதீய ஜனதா கட்சியின் 2ம் கட்ட வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. இதில் மைசூரு தொகுதியில் பாரதீய ஜனதா சார்பில் மைசூரு மன்னர் போட்டியிடுகிறார்.

நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ள நிலையில், பாரதீய ஜனதா, காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட தேசிய கட்சிகள் வேட்பாளர் பட்டியல்களை அறிவிக்க தொடங்கி விட்டன.

மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா கட்சி முதல் கட்டமாக 195 தொகுதி களுக்கு வேட்பாளர்களை அறிவித்தது. இந்த பட்டியலில் பிரதமர் மோடி (வாரணாசி), மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா (காந்திநகர்) ஆகியோரது பெயர்கள் இடம் பெற்று இருந்தன.

தமிழகம் இடம்பெறவில்லை

இந்த நிலையில் 2ம் கட்ட வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வதற்கான பாரதீய ஜனதா மத்தியக்குழு கூட்டம் கூடியது. அதில் பட்டியல் இறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலை 2ம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியானது.

கர்நாடகம், மத்தியபிரதேசம், குஜராத், பீகார், மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களை உள்ளடக்கிய 72 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பட்டியலில் தற்போதைய மத்திய அமைச்சர்கள் சிலருக்கும், அரியானா மாநில முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய மனோகர் லால் கட்டார், கர்நாடக முன்னாள் முதலமைச்சர் பசவராஜ் பொம்மை உள்ளிட்டோரும் இடம் பெற்றுள்ளனர்.

பட்டியலில் உள்ள முக்கிய வேட்பாளர்கள் விவரம் வருமாறு:

மத்திய அமைச்சர்கள் நிதின் கட்காரி – நாக்பூர். (மராட்டியம்), அனுராக் சிங் தாக்குர் – ஹமீம்பூர் (இமாச்சல்), பியூஸ்கோயல் – மும்பை வடக்கு (மராட்டியம்), பிரகலாத் ஜோஷி–தார்வாட் (கர்நாடகம்) மற்றும் மனோகர் லால் கட்டார் – கர்னல் (அரியானா), பசவராஜ் பொம்மை – ஹவேரி (கர்நாடகம்), கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பாவின் மகன் ராகவேந்திரா– சிவமொக்கா, மைசூரு மன்னர் யதுவீர் கிருஷ்ணதத்த உடையார் – மைசூரு.

பாரதீய ஜனதா சார்பில் இதுவரை 267 தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த முறையும் இந்த பட்டியலில் தமிழக வேட்பாளர்கள் குறித்த தகவல் இடம் பெறவில்லை.

தமிழகத்தில் கூட்டணி கட்சிகளுக்கான பேச்சுவார்த்தை நிறை வடைந்ததும், அடுத்தக்கட்ட பட்டியலில் அனேகமாக தமிழக வேட்பாளர்கள் பெயரும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உதகை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சம் நிதி உதவி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மார்ச்.14–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

நீலகிரி மாவட்டம், உதகை கிழக்கு கிராமம், பாபுஷா லைன் பகுதியில் தனியாருக்கு சொந்தமான கட்டுமான பணியின்போது எதிர்பாராதவிதமாக மண் சரிந்துள்ளது. இதில் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ரிஸ்வான் (22) என்பவர் மீட்கப்பட்டு அரசு மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்தவரின் உடலை தமிழ்நாடு அரசின் சார்பாக அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்க மாவட்ட கலெக்டர் உரிய ஏற்பாடுகள் செய்யவும் அறிவுறுத்தியுள்ளேன். காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த சகிர் (25) என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தவருக்கு ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 28.03.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஆன்லைன் மூலம் https://egold.auctiontiger.net–ல் 28.03.2024 அன்று மாலை 3.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	101042519555	ஹரிஹரசுதன்	த/பெ. நாகராஜன்	62, மூன்றாம் குறுக்குத் தெரு, காவேரி நகர், ரெட்டியார்பாளையம், பாண்டிச்சேரி 605010	23-12-2023	25,078.1
சென்னை	101042518847	ஹரிஹரசுதன்	த/பெ. நாகராஜன்	62, மூன்றாம் குறுக்குத் தெரு, காவேரி நகர், ரெட்டியார்பாளையம், பாண்டிச்சேரி 605010	10-11-2023	76,378.7
சென்னை	101042516382	ஆர் ஏ வந்தனா க/பெ. ராஜா	த/பெ. ராமு	59, 1வது தளம், 5வது தெரு சத்திய மூர்த்தி நகர், கதிர்வேடு, திருவள்ளூர், தமிழ்நாடு 600066	12-06-2023	732,132.6

ஏல தேதி 28.03.2024 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

கொண்டித்தோப்பில் ரூ.10 கோடியில் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் அடிக்கல்

சென்னை, மார்ச் 14–

அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் வால்டாக்ஸ் சாலையில் தொகுதி மேம்பாட்டு நிதிகளின் கீழ், ரூ.8.97 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள சமுதாயக் கூடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, திருப்பள்ளித் தெரு, பி.கே. கார்டன் பகுதியில் ரூ.3.08 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தினைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்து, வாட்டர் பேசின் சாலை, கொண்டித்தோப்பில் ரூ.10 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

தொடர்ச்சியாக, புரசைவாக்கம், டவுட்டன் மேம்பாலம் அருகிலுள்ள மாநகராட்சி பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ஸ்ட்ரிங்ஸ் தெருவில் ரூ.6.5 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையக் கட்டடம், ரூ.5.97 லட்சம் மதிப்பில் கேரம்போர்டு விளையாட்டரங்கம், ரூ.11.30 லட்சம் மதிப்பில் சாலையோரப் பூங்கா மற்றும் நேவல் மருத்துவமனை சாலையிலுள்ள கால்பந்து மைதானத்திற்கு ரூ.5.32 லட்சம் மதிப்பில் வாகன நிறுத்தம் அமைக்கும் பணி மற்றும் ராஜா முத்தையா சாலை, கண்ணப்பர் தெருவில் அமைந்துள்ள கட்டடத்தினை ரூ.10.90 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையமாக மேம்படுத்தும் பணி உள்ளிட்ட ரூ.40 லட்சம் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

பின்னர், அண்ணாநகர் மண்டலம், ஆதி ஆந்திரா நகர், வெள்ளாளர் தெருவில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் ரூ.50 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள நவீன உடற்பயிற்சிக் கூடத்திற்கான பணி, திருநகர், 20வது தெருவில் அமைந்துள்ள விளையாட்டுத் திடலில் ரூ.50 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்திற்கான பணி ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

இதில் மேயர் ஆர்.பிரியா, ஆ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ. நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, கூடுதல் ஆணையாளர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

BEFORE THE LD. FAST TRACK COURT- IV, GEORGE TOWN, CHENNAI
STC/PC 1985/2023

Mr. R. K. Gupta, Proprietor
M/s. ' Gupta Steel Suppliers'
No. SP – 49, Ambattur Industrial Estate,
3rd Main Road, 8th Street, 1st Floor, Near
Telephone Exchange, Chennai – 600 058.
...Complainant

Vs.

1.Ignatiussteel Private Limited
CIN No. U45309TN2022PTC155904
No.60, Brindhavan Garden Main Road,
Ponniammam Medu, Chennai – 600 110

2.Ms. Sharmila Esther
Director, Ignatiussteel Private Limited,
No.60, Brindhavan Garden Main Road,
Ponniammam Medu, Chennai – 600 110

3. Mr. Leonard Fernando
Director, Ignatiussteel Private Limited,
No.60, Brindhavan Garden Main Road,
Ponniammam Medu, Chennai-600 110
... Accused

PLEASE TAKE NOTICE that the Complainant above-named has filed a complaint, STC/PC 1985/2023 under Section 138 of Negotiable Instruments Act, 1881 against the 1st to the 3rd of you, namely, Ignatiussteel Private Limited and its two directors (Accused Nos. 1 to 3). The Ld. FTC Court vide order dated **05.03.2024** has directed service of summons to Accused Nos. 1 to 3 in the said complaint by substituted means. Hence, this publication.

The Accused Nos. 1 to 3 above are hereby called upon to enter appearance either in person or through Counsel, duly authorized, **on 30.04.2024 at 10. 30 a.m** failing which the matter will be decided in your absence.

Chennai
12.03.2024

K.F.Manavalan &
Bijesh Thomas
Counsel for Complainant

JM FINANCIAL HOME LOANS

ஜெஎம் பைனான்ஷியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்

CIN : U65999MH2016PLC288534

பதிவு அலுவலகம்: 3வது தளம், சுவாஷிஷ் ஐடி பார்க், மனை எண்.68இ,
தத்தா படா சாலை அருகில், டாடா ஸ்டீல் எதிரில், போரிவாலி (கி), மும்பை – 400 066.

சுவாதீன அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4), 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 8(1)வது விதிமுறை கீழ். (பிற்சேர்க்கை IV)

கீழே கையொப்பமிட்டுள்ள ஜெஎம் பைனான்ஷியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்டின் (இனி JMFHLL என குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் JMFHLL சார்பாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8(1)வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்(கள்)/ உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து JMFHLL–க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர் (கள்) முகவரி மற்றும் கடன் எண்.	ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து)	1. சுவாதீனத் தேதி 2. கோரிக்கை அறிவிப்பு தேதி 3. நிலுவைத் தொகை ரூ.
1	**திரு. தமிழ் குமார், திரு. ஜெயராஜ் ஜெய குமார் சி ஜெயராஜ், திருமதி வடிவு** எண்.9/5, தியாகராயா தெரு, அண்ணா சாலை, சென்னை, வரதராஜபுரம், புதுப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு – 600 002 LCHN20000009596	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பழைய கதவு எண். 5, புதிய கதவு எண் 9, தியாகராஜன் தெரு, இப்போது தியாகராஜன் சந்து, நரியங்காடு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 600002ல் உள்ள 420 சதுர அடி நிலத்துடன் அங்கு கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை உள்ளடக்கி உள்ளது. ஆர்.எஸ்.எண். 1283/48, சி.ஏ.எண்.992/2007 டிஎஸ்எல்ஆர் புதிய டி.எஸ். எண். 1283/129, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தின் தொகுதி எண். 21, மயிலாப்பூர் தாலுக்கா, சென்னை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் கிழக்கு: திரு.தாமோரன் மற்றும் பார்த்தசாரதிக்கு சொந்தமானது சொத்து, மேற்கு :திருமதி.எம்.சுமதிலுகாஸுக்கு சொந்தமான சொத்து. வடக்கு: தியாகராஜன்சந்து முன்பு தியாகராஜன் தெரு, தெற்கு:பொன்னப்பன் வீடு,	1. 12 மார்ச் 2024 2. 14 டிசம்பர் 2023 3. ரூ.22,60,640/– (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று நாற்பது மட்டும்)

இடம் : சென்னை
தேதி : 14.03.2024

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஜெஎம் பைனான்ஷியல் ஹோம் லோன்ஸ் லிமிடெட்டிற்காக

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம்: 11வது தளம், வடக்குப் பக்கம், ஆர்–டெக் பார்க்,
மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை – 400 063

ஈடுபெற்ற ஆஸ்திகள் விற்பனை அறிவிப்பு (விதி 6(2) மற்றும் விதி 8(6)ஐ பார்க்கவும்)

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002இன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம்/பிணையமாக வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா/அசையும் சொத்துகள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் எடுக்கப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. இது, ரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் 29.03.2019 தேதியிட்ட ஒதுக்கீடு ஒப்பந்தத்தின்படி RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையின் அறக்கட்டளையான ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு (RARC), ஆதரவாக உங்கள் கடன் கணக்குகளின் நிதி சொத்துக்கள்/கடன்கள், அதன் உரிமை, பாத்தியதை மற்றும் வட்டி மற்றும் அடிப்படைப் பத்திரங்களுடன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், நாங்கள் உங்கள் ஈடுபெற்ற கடன் வழங்குபவராக மாறிவிட்டோம் மற்றும் முழு ஒப்பந்த நிலுவைத் தொகையையும் திரும்பப் பெற சட்டப்பூர்வமாக உரிமை பெற்றுள்ளோம்.

எனவே, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கீழேயுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கள் பிரிவு 13(2)ன் கீழ் டிமாண்ட் நோட்டீசில் கண்டுள்ள தொகையை மீட்கவும் மற்றும் கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/ அடமானதாரர்களிடம் இருந்து வசூலிக்க ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC 059 (RHDFCL HL) அறக்கட்டளையின் அறக்கட்டளையான ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின் கீழ்க்கையொப்பமிட்டவரால் 23.04.2024 **அன்று ''எங்கு எப்படி எவ்வாறு உள்ளதோ அப்படியே''** என்ற அடிப்படையில் மின்னணு ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் என்று 30 நாட்களுக்கு முன்னதாக உங்களுக்கு அறிவிக்கிறார். ரிசர்வ் விலை மற்றும் டேவணித் தொகை டெபாசிட் (EMD) ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அடமான சொத்து குறித்த விவரங்கள்		
வ. எண்	கடன்தாரர்கள் பெயர், சொத்து விவரங்கள், டிமாண்ட் மற்றும் சுவாதீன அறிவிப்பு தேதி	ரிசர்வ் விலை
1	**(1) ஆர். ஜெயகுமரன், த/பெ. லேட். திரு. ராமநாதன், வசிப்பிடம், எண்.53/18, கைலாசநாதர் கோவில் தெரு, செங்கல்பட்டு டவுன் மற்றும் தாலுக்கா, காஞ்சீபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603 002, மேலும் : மெட்ரோபாலிடன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், சைதாப்பேட்டை பஸ்டிப்போ, சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600 015, மேலும் : 4/1, ராஜாஜி தெரு, சிங்கபெருமாள் கோவில், செங்கல்பட்டு, சிங்கப்பெருமாள் கோவில், காஞ்சீபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603 002, மேலும் : பழைய சர்வே எண். எஸ்.எண்.835/பி2, புதிய சர்வே எண்.835பி/13, புதிய சர்வே எண்.1223/24பி, ''பி'' பிளாக், ஆத்தூர் கிராமம், காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சீபுரம் மாவட்டம் மற்றும் கே. ரேவதி, க/பெ. ஆர். ஜெயகுமரன், வசிப்பிடம் : எண்.53/18, கைலாசநாதர் கோவில் தெரு, செங்கல்பட்டு டவுன் மற்றும் தாலுக்கா, காஞ்சீபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603 002, மேலும் : மெட்ரோபாலிடன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், சைதாப்பேட்டை பஸ்டிப்போ, சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு 600 015, மேலும் : 4/1, ராஜாஜி தெரு, சிங்கபெருமாள் கோவில், செங்கல்பட்டு, சிங்கப்பெருமாள் கோவில், காஞ்சீபுரம் மாவட்டம், தமிழ்நாடு 603 002, மேலும் 27/33, டிவிகே தெரு, வியாசர்பாடி, சென்னை, தமிழ்நாடு 600 039, மேலும் : பழைய சர்வே எண். எஸ்.எண்.835/பி2, புதிய சர்வே எண்.835பி/13, புதிய சர்வே எண்.1223/24பி, ''பி'' பிளாக், ஆத்தூர் கிராமம், காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சீபுரம் மாவட்டம்.** **சொத்து : காஞ்சீபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, காட்டாங்கொளத்தூர் பஞ்சாயத்து யூனியன், ஆத்தூர் கிராமம், ''பி'' பிளாக், பழைய சர்வே எண்.835/பி2, புதிய சர்வே எண்.835பி/13, பட்டாப்படி புதிய சர்வே எண். 1223/24பில் உள்ள 1176 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.** **எல்லைகள் : வடக்கு : திருமதி. தீனாபாய்க்கு சொந்தமான காலி நிலம், தெற்கு : 3 அடி அகல பொதுப் பாதை, கிழக்கு : திரு. கோவிந்தராஜுலு ரெட்டியாருக்கு சொந்தமான நிலம், மேற்கு : திரு. கஸ்தூரி ரங்கனுக்கு சொந்தமான நிலம்,** **டிமாண்ட் நோட்டீஸ் : 18.01.2019 அன்று ரூ.19,37,889.48/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது மற்றும் நாற்பத்தெட்டு பைசா மட்டும்) மற்றும் எதிர்கால வட்டி மற்றும் கட்டணங்கள். சுவாதீனத் தேதி : 19.01.2024**	ரூ. 23,72,400/- டேவணித் தொகை டெபாசிட் ரூ.2,37,240/-

சொத்தை பார்வையிடுதல் : 19.04.2024 அன்று காலை 11.00 மணியிலிருந்து மதியம் 02.00 மணி வரை
ஏலத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் : 22.04.2024 அன்று மாலை 5.00 மணி வரை
மின்னணு ஏலம் நடைபெறும் தேதி : 23.04.2024 காலை 11.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை ஒவ்வொன்றும் 5 நிமிட நீட்டிப்புடன்

விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. சொத்து ரிசர்வ் விலைக்கு கீழே விற்கப்படாது மற்றும் ஈடுபெற்ற கடன் வழங்கியவரான RARC ஆல் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டது.
2. மின்னணு ஏலம் ஆன்லைனில் மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மனை எண்.68, குர்கான், ஹரியானா, பின்கோடு – 122003 மூலம் நடத்தப்படும்.
3. மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கு முன், ஏலம் எடுப்பவர்கள் முறையான மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும் மற்றும் www.bankeauctions.com போர்ட்டலில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து, தங்கள் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை மெசர்ஸ் சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. மின்னணு ஏலத்தில் பங்கேற்க விரும்பும் வருங்கால ஏலதாரர்களுக்கு M/s. **சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், (தொடர்புகொள்ள வேண்டிய நபர்: திரு. தரணி கிருஷ்ணா, மொபைல் எண்.+91 9948182222,** Delhi@c1india.com **அல்லது** Support@bankeauctions.com **(உதவி எண்.7291981124, 25, 26)** அவர்களிடம் இருந்து ஆன்லைன் பயிற்சி பெறலாம்.
5. டேவணித் தொகை டெபாசிட் (EMD) RTGS/NEFT நிதி பரிவர்த்தனை மூலம் நடப்பு கணக்கு எண். 6742557088, வங்கியின் பெயர் : இந்தியன் வங்கி, கிளை : சாந்தாகுரூஸ் மேற்கு கிளை, மும்பை 400 054, பலன் பெறுபவர் பெயர் RARC 059 (RHDFCL HL) Trust, IFSC Code: IDIBOOOS010க்கு டெபாசிட் செய்யப்பட வேண்டும். காசோலைகள்/ டிமாண்ட் டிராப்ட் ஆகியவை டேவணித் தொகை டெபாசிட்டிற்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
6. ரிசர்வ் விலைக்கு கீழே உள்ள ஏலங்கள் மற்றும்/அல்லது டேவணித் தொகை டெபாசிட் செலுத்தப்படாத ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது. ஏலதாரர்கள் தங்களின் மேலதிக ஏலத் தொகையை ஒவ்வொன்றுக்கும் ரூ.5000க்கு அதிகமாக அதிகரிக்கலாம்.
7. வெற்றி பெற்ற ஏலதாரர் அறிவிக்கப்பட்ட உடனேயே வெற்றி பெற்ற ஏலதாரர் 25 சதவீத ஏலத்தொகை/விற்பனை விலையை (டேவணித் தொகை டெபாசிட் உட்பட) உடனே டெபாசிட் செய்ய வேண்டும். மீதமுள்ள ஏலத்தொகை/விற்பனை விலையில் 75 சதவீத நிலுவை தொகையை வெற்றிபெற்ற ஏலதாரரை அறிவித்த 15 நாளில் இருந்து வெற்றி பெற்ற ஏலதாரர் டெபாசிட் செய்ய வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ளபடி வெற்றிபெற்ற ஏலதாரர் விற்பனை விலையை டெபாசிட் செய்யத் தவறினால், டேவணித் தொகை டெபாசிட் உட்பட அனைத்து டெபாசிட்களையும் இழக்க நேரிடும்.
9. வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித் தொகை மின்னணு ஏல விற்பனை நடவடிக்கைகள் முடிந்த ஏழு நாட்களுக்குள் வட்டி இல்லாமல் திருப்பித் தரப்படும்.
10. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொடுக்கப்பட்ட விவரங்கள் அவருக்கு தெரிந்த வரை, நம்பிக்கை மற்றும் பதிவுகளின் சிறந்ததாகக் கூறப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்தவொரு பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடல் போன்றவற்றுக்கு பொறுப்பேற்க மாட்டார்.
11. கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் அல்லது எந்தவித காரணத்தையும் கூறாமல், ஏலத்தை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது விற்பனையை ஒத்திவைக்கவோ/தள்ளி வைக்கவோ/ ரத்து செய்யவோ அல்லது விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவோ முழு உரிமையும் விருப்பமும் உள்ளது.
12. ஏலதாரர்கள் சொத்தின் மீதான வில்லங்கள்/கட்டுப்பாடுகள்/சட்டபூர்வமான நிலுவைகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள் ஏலத்தை சமர்ப்பிக்கும் முன் சொத்து, விஸ்தீரணம், தரம் குறித்து தங்களை திருப்திப்படுத்த வேண்டும். ஆன்லைன் ஏலத்தை சமர்ப்பித்தபின், சொத்துக்கள் மற்றும் பிற விஷயங்கள் மீதான கட்டணங்கள், வேறு எந்த விஷயங்கள் போன்றவற்றின் எந்தவொரு இயல்பான உரிமை கோரலும் ஏற்கப்படாது.
13. கிடைக்கப்பெற்ற பதிவுகளின்படி, இந்த அறிவிப்பின் தேதியின்படி, கீழ்க்கையொப்பமிடப்பட்டவருக்கு சொத்துக்கள் மீதான வில்லங்கம் பற்றிய எந்த தகவல் இல்லை.
14. சொத்து மீது சட்ட ரீதியான ஏதேனும் நிலுவைகள், நிலுவைத் தொகைகள், வரிகள், வாட், டிடிஎஸ், ஜிஎஸ்டி, கட்டணங்கள் அல்லது சொத்து விற்பனைக்கான முத்திரை தீர்வை/பதிவு கட்டணம் ஆகியவை வாங்கியவரையே சாரும்.

மேலும் விவரங்களுக்கு, 18001039711/18602664111/18003099711ல் தொடர்பு கொள்ளலாம்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 6(2), 8(6) மற்றும் 9 (1) விதிகளின்படி 30 நாட்களுக்கு முன்பான சட்டரீதியான அறிவிப்பு

கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தொகையையும் மேலும் மின்னணு ஏலத்திற்கு முன் புதுப்பிக்கப்பட்ட வட்டி மற்றும் துணை செலவுகளையும் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறினால் மேலே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களின் மின்னணு ஏலம் நடைபெறும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி/செலவுடன் திரும்பப் பெறப்படும். ஏலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் ஏலங்கள் பெறப்படாவிட்டால், எந்தவொரு வருங்கால வாங்குபவருக்கும் மேலே நிர்ணயிக்கப்பட்ட ரிசர்வ் விலையில் அல்லது அதற்கு மேல் தனியார் ஒப்பந்தத்தின் மூலம் இந்த சொத்தை விற்க ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு உரிமை உள்ளது. கடன்தாரர்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள், அடமானச் சொத்தை கையகப்படுத்தும் நேரத்தில் வெளிப்படையான முறையில் தயாரிக்கப்பட்ட பஞ்சமன்வென்டரி அறிக்கையின்படி, சுவாதீன சொத்தில் உள்ள அனைத்து வீட்டுப் பொருட்கள்/தனிப்பட்ட உடமைகளையும் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 7 (ஏழு) நாட்களுக்குள் மாற்ற/அகற்றுமாறு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 7 (ஏழு) நாட்களுக்குள் வீட்டுப் பொருட்கள்/தனிப்பட்ட உடைமைகளை மாற்றத் தவறினால், நிறுவனம் "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே என்ற நிலையில்" கடன்தாரர்/உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களின் சொந்த செலவில் மற்றும் சொந்த பொறுப்பில் அதை அகற்ற/ மாற்ற/ அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும். இது தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் எழுப்பும் எந்தவொரு கோரிக்கைக்கும் நிறுவனம் பொறுப்பேற்காது.

இடம்: சென்னை, தேதி: 14.03.2024

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

குறிப்பு: SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(2)இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு ஏதேனும் செலுத்தப்பட்ட தொகையானது, நிறைவேற்றப்படும் /செட்டில்மெண்ட் நேரத்தில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைக் கணக்கிடுவதற்காக கணக்கிடப்படும்.

(அட்டவணை 1)
படிவம் ஏ
பொது அறிவிப்பு
(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6 - ன் கீழ்)
ஸ்டெரா இன்ஜினியரிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

தொடர்புடைய விவரங்கள்		
1.	நிறுவன கடனாளர் பெயர்	**ஸ்டெரா இன்ஜினியரிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்**
2.	நிறுவன கடனாளர் துவக்கத் தேதி	10/09/2008
3.	எந்த அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் பதிவாளர், சென்னை கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம்
4.	நிறுவன அடையாள எண்/ நிறுவன வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	U27100TN2008PTC069231
5.	நிறுவன கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்)	பதிவு அலுவலகம்: பாரதி வில்லாஸ், 26பி, ஜவகர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், கிண்டி ஐஇ, சென்னை – 600 032.
6.	நிறுவன கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	7.3.2024 (உத்தரவு நகல் 12.3.2024 அன்று பெறப்பட்டது)
7.	திவால் தீர்மான நடைமுறை மூடும் உத்தேச தேதி	2 செப்டம்பர், 2024
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	சத்யதேவி அலமுரி IBBI/IPA-002/IP-N00071/2017-18/10205
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	எண்.23, லேக் ஏரியா, 3வது குறுக்கு தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034. மின்னஞ்சல் முகவரி: satyadevifcs@gmail.com
10.	தொடர்புக்கான இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	எண்.23, லேக் ஏரியா, 3வது குறுக்கு தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034, தமிழ்நாடு, இந்தியா, மின்னஞ்சல் முகவரி: cirp.stera@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	26.3.2024 (உத்தரவு பெறப்பட்ட தேதியான 12.3.2024 முதல் 14 நாட்கள்)
12.	பிரிவு 21, உப பிரிவு (6ஏ), உட்கூறு (பி)ன் கீழ் கடன் வழங்கியவர்கள் வகை, வேறு ஏதேனும் இருப்பின் இடைக்கால தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்டது	பொருந்தாது
13.	வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்	(a) இணைய இணைப்பு: https://ibbi.gov.in/home/downloads (b) பொருந்தாது

7.3.2024 தேதியிட்ட உத்தரவு எண்.IBA/581/2019–ன்படி **ஸ்டெரா இன்ஜினியரிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டில்** கார்ப்பரேட் திவால்நிலைத் தீர்மான செயல்முறையை தொடங்க 7.3.2024 அன்று தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், டிவிஷனல் பெஞ்ச் II, சென்னை உத்தரவிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஸ்டெரா இன்ஜினியரிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 26.03.2024 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது கோரிக்கைகளை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். வரிசை எண். 12–க்கு எதிரே பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பிரிவைச் சேர்ந்த நிதிக் கடன் வழங்கியவர்கள், இந்த கார்ப்பரேட் கடனாளிக்கு பொருந்தாது.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

ஒப்பம்/- CS சத்யதேவி அலமுரி
ஸ்டெரா இன்ஜினியரிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டின்
இடைக்கால தீர்மான நிபுணர்
IBBI/IPA-002/IP-N00071/2017-18/10205

தேதி : 12.3.2024
இடம் : சென்னை

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் தேனீ மாவட்டம், போடிநாய்க்கனூர் – 625 531, போடிநாய்க்கனூர் சுப்ரமணிய கோயில் தெரு, கதவு எண்:10/24 என்ற முகவரியில் வசிக்கும் திரு.S.பூவையா அவர்களின் மனைவியுமான 55 வயதுள்ள திருமதி.பவளரோஜாவிருக்கு சொந்தமான சொத்தானது திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தாலுகா, முக்கூடல் கிராமம், வார்டு முன்.03 தற்போது வார்டு எண்.10 ல் பூவையா தெருவில் இராமநத்தம் பழைய சர்வே எண்.46, புதிய நத்தம் ரீ சர்வே படி சர்வே எண்.294/24 நம்பரில் 272.45 சதுரமீட்டர் உள்ள மனைக்கு அதிலுள்ள வீட்டுக்கும் சொந்தமான அசல் கிரைய ஆவணத்தை எனது கட்சிக்காரர் தொலைத்துவிட்டார், அசல் கிரைய ஆவண நாள் 02.11.1988 ஆவண எண்.359/1988 சார்பதிவாளர் அலுவலகம் முக்கூடல், மேற்படி ஆவணத்தை கண்டடுத்தலோ அல்லது வைத்து இருந்தாலோ இந்த அறிவிப்பு வெளியான 7 தினங்களுக்குள் கீழ்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும், மேற்படி கண்டடுத்த ஆவணத்தை வைத்து எனது கட்சிக்காரருக்கு வில்லங்கம் ஏற்படுத்தினாலோ, அல்லது தவறாக நடக்க முயன்றாலோ எனது கட்சிக்காரர் எவ்வகையிலும் பொறுப்பு ஆகமாட்டார் இல்லையென்னில் சட்டப்படி தண்டிக்கப்படுவர்.

K.NATARAJAN
Advocate
Plot No.1393, 20th Street Poompuhar Nagar,
Kolathur, Chennai - 600 099
Mobil No. 9444545430

பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், சென்னை 600083, அசோக் நகர், ஜாபர்கான்பேட்டை, கங்கா நகர், அருள் சோலா அபார்ட்மெண்ட், பிளாட் எண். SA1ல் வசிக்கும் எனது கட்சிக்காரர் திரு ச.சுரேஷ்குமரர் அவர்கள் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் தாலூகா, சூரக்கோட்டை கிராமம், மேரி ஞானம் நகர் சர்வே எண்கள். 5571, 5572, 5581 பார்ட் மற்றும் 5582 பார்ட்டில் அமைந்துள்ள சுமரர் 2400 சதுர அடி கொண்ட பிளாட் எண. 62ஐ மகர்நோம்புசாவடி சரர் பதிவாளர் அலுவலகத்தில் 2012 ஆம் ஆண்டு பதியப்பட்ட கிரைய ஆவணம் 1333 மூலம் கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வருகிறார். எனது கட்சிக்காரர் 26.02.2024 அன்று மாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரையிலான நேரத்தில் தனது வழக்கறிஞரை சந்தித்து சட்டக் கருத்துரை பெறுவதற்காக சென்னை 600001 என்.எஸ்.சி. போஸ் சாலை, போலீஸ் பூத் அருகில் தனது இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது மகர்நோம்புசாவடி சரர் பதிவாளர் அலுவலகத்தில் 2012 ஆம் ஆண்டு பதியப்பட்ட கிரைய ஆவணம் 1333 ஒரிஜினலை தொலைத்து விட்டார். உடனடியாக காணாமல் போன பத்திரத்தை தீவிரமாக தேடியும் அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை. எனது கட்சிக்காரர் மேற்படி ஒரிஜினல் பத்திரத்தை எந்த ஒரு நிதி நிறுவனத்திடமோ அல்லது தனியாரிடமோ அடமானம் வைக்கவில்லை என்றும் எந்தவொரு வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லை என்றும் இதன் மூலம் உறுதி கூறுகிறார். மேற்படி பத்திரத்தை கண்டு எடுப்பவர்கள் அதனை கீழ்க்கண்ட விலாசத்தில் என்னிடமோ அல்லது மேலே குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள எனது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்க வேண்டுமாறும், தவிர்த்து துஷ்பிரயோகம் செய்யும் பட்சத்தில் அது எந்தவிதத்திலும் எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது எனவும் இந்த பொது அறிவிப்பின் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கோ. ராமலிங்கம்
வழக்குரைஞர்
எழும்பூர் நீதிமன்றம், சென்னை 600008.

பெயர் மாற்றம்

பசுருதின் தந்தை பெயர் ஜபருல்லாகான், பிறந்த தேதி 23.06.1990 (சொந்த மாவட்டம்: சென்னை) கதவு எண் 21/72, 5வது மெயின் ரோடு, நந்தனம் சென்னை-600035 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **பசுருதின் தந்தை பெயர் ஜபருல்லா கான்** என்று அறியப்படுவேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

பசுருதின் தந்தை பெயர் ஜபருல்லாகான்

IN THE COURT OF
IX ASSISTANT CITY CIVIL
AT CHENNAI
E.A.No. 3 of 2024
IN
E. P. No. 1845 of 2008
IN
Arc. No. 90 of 2007

Margadarsi Chits Limited.,
Represented by its Foreman,
... Petitioner/DH
-Vs-
K. Sukumaran and others
...Respondents/JD's

To,
K.Sukumaran,
S/o. Ramakrishnan Pillai,
No. 58/2, Old No. 133,
Madhavaram High Road,
Perambur,Chennai - 600 011.

மேற்கண்ட மனு E.A. No.3 of 2024 நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தின் விலையை குறைப்பதற்காக (To reduce the upset price) தாக்கல் செய்யப்பட்ட மேற்கண்ட மனு E.A.No.3 of 2024 மேற்கண்ட நீதிமன்றத்தில் 28.03.2024 அன்று காலை 10.30 மணிக்கு தங்கள் வருகைக்காக விசாரணைக்கு வருகிறது என்பதை அறியவும். மேற்கண்ட தேதி மற்றும் மேற்கண்ட நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ வருகை தர தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்.

M. Durairaj,
மனுதாரர் வழக்கறிஞர்